| பெறுகிறது. நீங்கள் Google மூலம் சேமிக்கும் தரவின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பிற்கான மதிப்பு, நாங்கள் இந்தச் சட்டக் கோரிக்கைகளுக்கு இணங்குவதை ஆதரிக்கிறது. எங்களது சட்ட நிபுணர்கள் குழு, கோரிக்கையின் வகையைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொன்றையும் மதிப்பாய்வு செய்கிறார்கள். அத்துடன், கோரிக்கை அதீதமாகத் தோன்றினாலோ அல்லது சரியான செயல்முறையைப் பின்பற்றவில்லை என்றாலோ, அதை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். | கொண்டு தீர்மானிக்கப்படும் மற்றும் பகுதியளவு உங்கள் சாதனத்தின் அமைப்புகளையும் உங்கள் கணக்கு அமைப்புகளையும் பொறுத்து உங்கள் சாதனத்திலோ அதைச் சுற்றியோ உள்ள சென்சார்களில் இருந்தோ பெறப்படும் பிற இருப்பிடத் தரவு ஆகியவை இதில் அடங்கும்.<br>• [பொதுவில் அணுகக்கூடிய ஆதாரங்களில் உள்ள தகவல்கள்]. ஆன்லைனில் பொதுவில் கிடைக்கக்கூடி | பராமரிப்பு போன்ற நோக்கங்களுக்காகச் சில தகவல்களைத் தக்கவைத்துக் கொள்வது அல்லது பயனர்கள் எங்கள் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வயதை எட்டிவிட்டதை உறுதிசெய்ய உதவும் வகையில் தகவல்களைச் செயலாக்குவது மற்றும் தக்கவைத்துக் கொள்வது போன்ற **சட்டப்பூர்வக் கட்டாயம்** எங்களுக்கு இருக்கும்போது. |

| தரவை ஏன், எப்படிச் செயலாக்குகிறோம்? | எந்தத் தரவு செயலாக்கப்படுகிறது? | சட்டப்பூர்வத் தேவைகள் |
|---|---|---|
| • நிதி அறிக்கைகளைப் பராமரித்தல் போன்ற காரணங்களுக்காகச் சட்டப்பூர்வக் கட்டாயங்களுக்கு இணங்கும் வகையில் சில நேரங்களில் குறிப்பிட்ட தகவல்களை (வரி அல்லது கணக்கீட்டிற்காக Googleளுக்கு நீங்கள் செலுத்திய பேமெண்ட் போன்ற தகவல்கள்) நாங்கள் தக்கவைக்க வேண்டியிருக்கும்.<br>• பயனர்கள் எங்கள் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வயதை எட்டியுள்ளதைச் சரிபார்க்க, பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி நாங்கள் பல | ய தகவல் (எ.கா. உள்ளூர் செய்தித்தாள் கட்டுரையில் உங்கள் பெயர் காட்டுப்படுவது), பிற பொது ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல் ஆகியவை இவற்றில் அடங்கும்.<br>• நம்பகமான கூட்டாளர்களிடமிருந்து பெறப்படும் தகவல்கள். Googleளின் சேவைகளில் காட்டப்படும் பிசினஸ் தகவல்களை வழங்கக்கூடிய டைரக்டரி சேவைகள், தவறான உபயோகத்திலிருந்து பாதுகாப்பதற்கான தகவல்களை வழங்கக்கூடிய பாதுகாப்புக் கூட்டாளர்கள் போன்றவை இவற்றில் அடங்கும். | |

| தரவை ஏன், எப்படிச் செயலாக்குகிறோம்? | எந்தத் தரவு செயலாக்கப்படுகிறது? | சட்டப்பூர்வத் தேவைகள் |
| --- | --- | --- |
| நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உங்கள் வயதைத் தீர்மானிக்க, நீங்கள் வழங்கிய பிறந்த தேதியை நாங்கள் செயலாக்குகிறோம். மேலும், நீங்கள் Google கணக்கில் உள்நுழைந்திருந்தாலும் வெளியேறியிருந்தாலும் எங்கள் சேவைகளில் நீங்கள் மேற்கொண்ட செயல்பாடுகளைப் பற்றிய தகவல்களைச் செயலாக்குகிறோம். அத்துடன், நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா என்பதைத் தோராயமாகத் தீர்மானிக்க மெஷின் லேர்னிங் தொழில்நுட்பத்தைப் | | |

| தரவை ஏன், எப்படிச் செயலாக்குகிறோம்? | எந்தத் தரவு செயலாக்கப்படுகிறது? | சட்டப்பூர்வத் தேவைகள் |
|---|---|---|
| பயன்படுத்துகிறோம். சில சூழல்களில், எங்கள் சேவைகளைப் பயன்படுத்துவதற்கான வயதை நீங்கள் எட்டிவிட்டீர்கள் என்பதை எங்களால் சரிபார்க்க முடியாவிட்டால், உங்கள் அரசாங்க ஐடி, கிரெடிட் கார்டு, உங்களின் புகைப்படம், மொபைல் எண் போன்ற பிற தகவல்களை உங்கள் வயதைச் சரிபார்ப்பதற்காக நாங்கள் கேட்கலாம். | | |

## உங்கள் Google சேவைகளை இணைத்தல்

நீங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பயனராக இருந்தால், குறிப்பிட்ட சில Google சேவைகளை இணைத்தபடியே வைத்திருப்பதற்கான விருப்பத்தை உங்களுக்கு வழங்குகிறோம். உங்கள் இணைக்கப்பட்ட சேவைகளையும் விருப்பங்களை நிர்வகிப்பது எப்படி என்பதையும் குறித்து DMA மற்றும் உங்கள் இணைக்கப்பட்ட

சேவைகள் குறித்த அறிமுகம் என்ற பக்கத்தில் மேலும் தெரிந்துகொள்ளலாம்.

---

இந்தக் கொள்கையைப் பற்றி

# இந்தக் கொள்கையைப் பயன்படுத்தும் போது

இந்தத் தனியுரிமை கொள்கையானது Google LLC மற்றும் அதன் கூட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் எல்லாச் சேவைகளுக்கும் பொருந்தும், இதில் YouTube, Android மற்றும் விளம்பரச் சேவைகள் போன்று மூன்றாம் தரப்புத் தளங்கள் வழங்கும் சேவைகளும் அடங்கும். இந்தத் தனியுமைக் கொள்கையுடன் இணைத்துக் கொள்ளாமல், தனியாகத் தனியுரிமைக் கொள்கைகளைக் கொண்டிருக்கும் சேவைகளுக்கு, இந்தத் தனியுரிமைக் கொள்கை பொருந்தாது.

இவற்றுக்கு இந்தத் தனியுரிமைக் கொள்கை பொருந்தாது

- எங்கள் சேவைகளை விளம்பரப்படுத்தும் பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் தகவல் நடைமுறைகள்
- பிற நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் வழங்குகின்ற தயாரிப்புகள் அல்லது தளங்கள் உள்ளிட்ட சேவைகள் (இவை கொள்கை பொருந்தக்கூடிய Google சேவைகளைக் கொண்டிருக்கலாம்), அல்லது தேடல் முடிவுகளில் உங்களுக்குக் காட்டப்படுகின்ற அல்லது எங்கள் சேவைகளில் இருந்து இணைக்கப்படுகின்ற தயாரிப்புகள் அல்லது தளங்கள்

# இந்தக் கொள்கையில் மாற்றங்கள்

இந்தத் தனியுரிமைக் கொள்கையை அவ்வப்போது மாற்றுகிறோம். உங்கள் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் இந்தத் தனியுரிமைக் கொள்கையின் கீழ் உங்கள் உரிமைகளைக் குறைக்க மாட்டோம்.

கடைசியாக மாற்றங்களை வெளியிட்ட தேதியை எப்போதும் குறிப்பிடுகிறோம் மேலும், நீங்கள் பார்ப்பதற்காக, காப்பகப்படுத்திய பதிப்புகளுக்கு அணுகலை வழங்குவோம். மாற்றங்கள் குறிப்பிடத்தகுந்ததாக இருந்தால், தெள்ளத் தெளிவான அறிக்கையை வழங்குவோம் (குறிப்பிட்ட சேவைகளுக்காக, தனியுரிமைக் கொள்கை மாற்றங்களின் மின்னஞ்சல் அறிவிப்பு உட்பட).

---

தொடர்புடைய தனியுரிமை பயிற்சிகள்

## குறிப்பிட்ட Google சேவைகள்

சில Google சேவைகள் குறித்த கூடுதல் தகவலைப் பின்வரும் தனியுரிமை அறிக்கைகள் வழங்குகின்றன:

- Payments
- Fiber
- Gemini ஆப்ஸ்
- Google Fi
- Google Workspace for Education
- Read Along
- YouTube கிட்ஸ்
- Family Link மூலம் நிர்வகிக்கப்படும் 13 (அல்லது உங்கள் நாட்டில் பொருந்தக்கூடிய) வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் Google கணக்குகள்
- பிள்ளைகள் & டீன் ஏஜர்களுக்கான Family Link தனியுரிமை வழிகாட்டி

- Google Assistant இல் இருக்கிற குழந்தைகள் அம்சங்களில் இருந்து எடுத்த குரல் மற்றும் ஒலிப்பதிவுத் தொகுப்பு

Google Workspace அல்லது Google Cloud Platform சேவையைப் பயன்படுத்தும் நிறுவனத்தில் நீங்கள் உறுப்பினர் என்றால், இந்தச் சேவைகள் உங்கள் தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு சேகரித்துப் பயன்படுத்துகின்றன என்பதை Google Cloud தனியுரிமை அறிக்கை மூலம் அறியலாம்.

## பிற பயனுள்ள ஆதாரங்கள்

எங்கள் பயிற்சிகள் மற்றும் தனியுரிமை அமைப்புகள் குறித்து நீங்கள் மேலும் அறிந்துகொள்வதற்கான பயனுள்ள ஆதாரங்களை, பின்வரும் இணைப்புகள் காட்டுகின்றன:

- உங்கள் கணக்கை நிர்வகிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பெரும்பாலான அமைப்புகள் உங்கள் Google கணக்கில் அமைந்துள்ளது
- உங்கள் Google கணக்கிற்கான முக்கியத் தனியுரிமை அமைப்புகளுக்கு, தனியுரிமை சரிபார்ப்பு வழிகாட்டுகிறது
- எங்களின் உள்ளமைந்த பாதுகாப்பு, தனியுரிமைக் கட்டுப்பாடுகள், ஆன்லைனில் உங்கள் குடும்பத்திற்கு அடிப்படை டிஜிட்டல் விதிகளை அமைப்பதற்கு உதவும் கருவிகளைப் பற்றி மேலும் அறிய, Googleளின் பாதுகாப்பு மையத்திற்குச் செல்லவும்
- தனியுரிமை தொடர்பாக எங்களிடம் அதிகம் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை டீன் ஏஜர்களுக்கான Googleளின் தனியுரிமை வழிகாட்டியில் நீங்கள் பார்க்கலாம்
- இந்தத் தனியுரிமைக் கொள்கை மற்றும் எங்கள் சேவை விதிமுறைகள் குறித்தக் கூடுதல் தகவலை, தனியுரிமையும் விதிமுறைகளும் வழங்குகிறது
- தொழில்நுட்பங்களில் பின்வருபவற்றைக் குறித்த கூடுதல் தகவல் இருக்கும்:
    - குக்கீகளை Google எப்படிப் பயன்படுத்துகிறது

- விளம்பரப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள்
- எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும் தளங்கள் அல்லது பயன்பாடுகளின் தகவலை Google பயன்படுத்தும் முறை

---

# முக்கிய வார்த்தைகள்

## அல்காரிதம்

சிக்கலைத் தீர்க்கும் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதில் கணினி பின்பற்றும் செயல்முறை அல்லது விதிமுறைகளின் தொகுப்பு.

## உலாவி இணையச் சேமிப்பகம்

உலாவி இணையச் சேமிப்பகமானது, சாதனத்தில் உள்ள உலாவியில் தரவினைச் சேமிக்க இணையதளங்களை அனுமதிக்கிறது. "அகச் சேமிப்பகம்" பயன்முறையில் பயன்படுத்தும் போது, அமர்வுகள் முழுவதும் தரவைச் சேமிப்பதை அது இயக்குகிறது. இதன் மூலம், உலாவி மூடப்பட்டு மீண்டும் திறக்கப்படும்போதும், தரவை மீட்டெடுக்க முடியும். HTML 5 என்பது இணையச் சேமிப்பகத்தைப் பயன்படுத்த உதவும் தொழில்நுட்பம் ஆகும்.

## குக்கீகள்

குக்கீ என்பது நீங்கள் ஒரு இணையதளத்தைப் பார்வையிடும் போது, உங்கள் கணினிக்கு அனுப்பப்படும் எழுத்துகளின் சரத்தைக் கொண்ட சிறிய கோப்பு ஆகும். தளத்திற்கு மீண்டும் செல்லும் போது, அந்தத் தளம் உங்கள் உலாவியை அடையாளங்காண குக்கீ அனுமதிக்கிறது. பயனர் விருப்பத்தேர்வுகளையும் பிற தகவலையும் குக்கீகள்

சேமிக்கக்கூடும். எல்லா குக்கீகளைப் புறக்கணிக்கும்படியும் அல்லது குக்கீயை அனுப்பும் போது தெரிவிக்கும்படியும் உங்கள் உலாவியை உள்ளமைக்கலாம். எனினும், சில இணைய அம்சங்கள் அல்லது சேவைகள் குக்கீகள் இல்லாமல் சரியாக இயங்காமல் போகலாம். குக்கீகளை Google எவ்வாறு பயன்படுத்துகிறது மற்றும் நீங்கள், எங்கள் கூட்டாளர்களின் தளங்கள் அல்லது பயன்பாடுகளைப் பயன்படுத்தும்போது குக்கீகள் உள்ளிட்ட தரவை Google எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைப் பற்றி மேலும் அறியவும்.

## கூட்டு நிறுவனங்கள்

கூட்டு நிறுவனம் என்பது Google குழும நிறுவனங்களுக்குச் சொந்தமானதாகும். அவற்றில் ஐரோப்பிய ஒன்றியத்தில் நுகர்வோர் சேவைகளை வழங்கும் பின்வரும் நிறுவனங்களும் அடங்கும்: Google Ireland Limited, Google Commerce Ltd, Google Payment Corp மற்றும் Google Dialer Inc. ஐரோப்பிய ஒன்றியத்தில் வணிகச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பற்றி மேலும் அறியவும்.

## சாதனம்

சாதனம் என்பது Google சேவைகளை அணுகுவதற்குப் பயன்படுத்தக் கூடிய கணினி ஆகும். எடுத்துக்காட்டாக, டெஸ்க்டாப் கணினிகள், டேப்லெட்கள், ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள் மற்றும் ஸ்மார்ட்ஃபோன்கள் போன்ற அனைத்தும் சாதனங்களாகும்.

## சேவையகப் பதிவுகள்

பெரும்பாலான வலைத்தளங்கள் போல, தளங்களைப் பார்வையிடும் போது எங்கள் சேவையகங்கள் தானாகவே பக்கக் கோரிக்கைகளைப் பதிவு செய்யும். இந்த “சேவையக பதிவுகள்” வலை கோரிக்கை, இணைய நெறிமுறை முகவரி, உலாவி வகை, உலாவி மொழி, உங்கள் கோரிக்கையின் தேதியும் நேரமும் மற்றும் உங்கள் உலாவியை தனிப்பட்ட முறையில் அடையாளம் காணும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குக்கீகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

“கார்கள்” என்பதற்கான தேடலுக்கான பதிவு உள்ளீடு இது போன்று இருக்கும்:

```
123.45.67.89 - 25/Mar/2003 10:15:32 -
http://www.google.com/search?q=cars -
Chrome 112; OS X 10.15.7 -
740674ce2123e969
```

- `123.45.67.89` பயனரின் ISP ஆல் பயனருக்கு ஒதுக்கப்பட்ட ஐபி அட்ரெஸ் ஆகும். பயனரின் சேவையைப் பொறுத்து, அவர் ஒவ்வொரு முறை இணையத்துடன் இணைக்கும்போதும் சேவை வழங்குநரின் மூலம் வெவ்வேறு முகவரி ஒதுக்கப்படலாம்.
- `25/Mar/2003 10:15:32` வினவலின் தேதி மற்றும் நேரம்.
- `http://www.google.com/search?q=cars` தேடல் வினவல் உட்பட, கோரப்பட்ட URL.
- `Chrome 112; OS X 10.15.7` பயன்படுத்தப்படும் உலாவி மற்றும் ஆப்ரேட்டிங் சிஸ்டம் ஆகும்.
- `740674ce2123a969` இந்தக் குறிப்பிட்ட கணினிக்கு, முதல் முறையாக அது Google இல் பார்வையிட்ட போது ஒதுக்கிய தனிப்பட்ட குக்கீ ஐடி ஆகும். (பயனர்கள் குக்கீகளை நீக்கலாம். பயனர் கணினியின் மூலம் கடைசியாக Google இல் பார்வையிட்ட வரையுள்ள குக்கீகளை நீக்கினால், அடுத்த முறை அந்தக் குறிப்பிட்ட சாதனத்தில் இருந்து Google இல் பார்வையிடும் போது, அது இந்தச் சாதனத்திற்கான தனிப்பட்ட குக்கீ ஐடியாக இருக்கும்).

## தனிப்பட்ட அடையாளங்காட்டிகள்

தனித்துவமான அடையாளங்காட்டி என்பது, உலாவி, பயன்பாடு அல்லது சாதனத்தை தனித்துவமாக அடையாளங்காணப் பயன்படுத்தக்கூடிய எழுத்துகளின் சரமாகும். பல்வேறு அடையாளங்காட்டிகளானவை, அவை எவ்வளவு நிலைத்தன்மையோடு உள்ளன என்பதில், பயனர்கள் அவற்றை மீட்டமைப்பது மற்றும் அவற்றை அணுகுவதைப் பொறுத்து மாறுபடுகின்றன.

தனித்துவமான அடையாளங்காட்டிகளை, பாதுகாப்பு மற்றும் மோசடியைக் கண்டறிதல், பயனரின் மின்னஞ்சல் இன்பாக்ஸ் போன்ற சேவைகளை ஒத்திசைத்தல், பயனரின் விருப்பங்களை நினைவில்

வைத்து அவற்றிற்கு தொடர்பான விளம்பரங்களைக் காட்டுதல் உட்பட, பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, குக்கீகளில் சேமிக்கப்பட்ட தனித்துவமான அடையாளங்காட்டிகள், உங்கள் உலாவியில், தளங்கள் நீங்கள் விரும்பும் மொழியில் உள்ளடக்கத்தைக் காட்டுவதற்கு உதவுகின்றன. எல்லா குக்கீகளைப் புறக்கணிக்கும்படியும் அல்லது குக்கீயை அனுப்பும் போது தெரிவிக்கும்படியும் உங்கள் உலாவியை உள்ளமைக்கலாம். Google குக்கீகளை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பது பற்றி மேலும் அறியவும்.

உலாவிகளைத் தவிர பிற இயங்குதளங்களில், குறிப்பிட்ட சாதனம் அல்லது அந்தச் சாதனத்தில் உள்ள பயன்பாட்டை அடையாளங்காண தனித்துவமான அடையாளங்காட்டிகள் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, விளம்பர ஐடி போன்ற தனித்துவமான அடையாளங்காட்டியானது, Android சாதனங்களில் தொடர்புடைய விளம்பரங்களை வழங்கப் பயன்படுகிறது, மேலும் இதை உங்கள் சாதனத்தின் அமைப்புகளில் நிர்வகிக்க முடியும். மொபைல் ஃபோனின் IMEI போன்ற தனித்துவமான அடையாளங்காட்டிகள் அவற்றின் உற்பத்தியாளர்களால் சாதனத்தில் இணைக்கப்படலாம் (சில நேரங்களில் உலகளாவிய தனித்துவமான ஐடி அல்லது UUID என்று அழைக்கப்படும்). எடுத்துக்காட்டாக, சாதனத்தின் தனித்துவமான அடையாளங்காட்டியானது, உங்கள் சாதனத்திற்கான எங்கள் சேவையைத் தனிப்பயனாக்கவோ அல்லது எங்கள் சேவைகள் சார்ந்த சாதனத்தின் சிக்கல்களைப் பகுப்பாய்வு செய்யவோ பயன்படுத்தப்படலாம்.

## தனிப்பட்ட முறையில் அடையாளம் காண முடியாத தகவல்

இந்தத் தகவல் பயனர்களைப் பற்றி பதிவுசெய்யப்பட்டதாகும். எனவே இது தனிபட்ட முறையில் அடையாளம் காணும் பயனரை இனி பிரதிபலிக்காது அல்லது குறிப்பிடாது.

## தனிப்பட்டத் தகவல்

உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி அல்லது பில்லிங் தகவல் அல்லது உங்கள் Google கணக்கில் நாங்கள் தொடர்புபடுத்திய தகவல் போன்ற

Google ஆல் இணைக்கப்பட்ட பிற தரவு போன்ற நீங்கள் வழங்கிய தகவல்கள் உங்களைத் தனிப்பட்ட முறையில் அடையாளப்படுத்தும்.

## நுட்பமான தனிப்பட்ட தகவல்

இது ரகசிய மருத்துவ உண்மைகள், இனத் தோற்றம், அரசியல் அல்லது மதம் சார்ந்த நம்பிக்கைகள் அல்லது பாலுணர்வு போன்ற தலைப்புகள் தொடர்பான தனிப்பட்ட தகவலின் குறிப்பிட்ட வகையாகும்.

## பயன்பாட்டுத் தரவுத் தேக்ககம்

பயன்பாட்டுத் தரவுத் தேக்ககம் என்பது சாதனத்தில் உள்ள தரவுக் களஞ்சியம் ஆகும். இணைய இணைப்பு இல்லாமல் இணையப் பயன்பாட்டை இயக்குவது மற்றும் உள்ளடக்கத்தை வேகமாக ஏற்றுவதன் மூலம் பயன்பாட்டின் செயல்திறனை மேம்படுத்துவது போன்றவற்றை இதனால் செய்ய முடியும்.

## பிக்சல் குறிச்சொல்

பிக்சல் குறிச்சொல் என்பது, இணையதளத்தின் பார்வைகள் அல்லது மின்னஞ்சலைத் திறப்பது போன்ற சில செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கு, இணையதளத்தில் அல்லது மின்னஞ்சலின் பொருளில் வைக்கப்படும் தொழில்நுட்பமாகும். பிக்சல் குறிச்சொற்கள் பெரும்பாலும் குக்கீகளுடன் சேர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

## ரெஃபரர் URL

ரெஃப்ரர் URL (சீரான ஆதார இருப்பிடங்காட்டி) என்பது, பொதுவாக இணையப்பக்கத்திற்கான இணைப்பைக் கிளிக் செய்யும்போது, இணைய உலாவி மூலம் இலக்கு இணையப்பக்கத்திற்குப் பரிமாற்றப்படும் தகவலாகும். ரெஃப்ரர் URL இல், உலாவியில் கடைசியாகப் பார்வையிட்ட இணையப்பக்கத்தின் URL இருக்கும்.

## Google கணக்கு

Google கணக்கிற்குப் பதிவுசெய்து, சில தனிப்பட்ட தகவலை (பொதுவாக உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்) எங்களுக்கு வழங்குவதன் மூலம், எங்கள் சேவைகளில் சிலவற்றை நீங்கள் அணுகலாம். இந்தக் கணக்குத் தகவல், Google சேவைகளை நீங்கள் அணுகும் போது உங்களை அங்கீகரிக்கவும் பிறரின் அங்கீகாரமற்ற அணுகலில் இருந்து உங்களைப் பாதுகாக்கவும் பயன்படுகிறது. உங்கள் Google கணக்கு அமைப்புகளின் மூலம், எப்போது வேண்டுமானாலும் உங்கள் கணக்கைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

### IP முகவரி

இணையத்தில் இணைக்கப்படும் ஒவ்வொரு சாதனத்திற்கும், இணைய நெறிமுறை (ஐபி) முகவரி எனப்படும் எண் ஒதுக்கப்படும். இந்த எண்கள் பொதுவாக நாடு-சார்ந்த பகுதிகளின் அடிப்படையில் ஒதுக்கப்படும். ஐபி முகவரியானது, சாதனம் இணையத்திற்கு இணைக்கும் இருப்பிடத்தினை அடையாளங்காணப் பொதுவாகப் பயன்படுத்தப்படும். இருப்பிடத் தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துவோம் என்பது குறித்து மேலும் அறிக.

## கூடுதல் சூழல்

### அகற்றுதல்

உதாரணமாக, மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி பொருந்தக்கூடிய சட்டம் (தரவுப் பாதுகாப்புச் சட்டம் உட்பட), எங்கள் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளடக்கத்தை அகற்ற நீங்கள் கோரிக்கை விடுக்கலாம், குறிப்பிட்ட Google சேவைகளில் உங்கள் தகவல்களைக் கொண்டிருக்கும் உள்ளடக்கம் போன்றவையும் இதில் அடங்கும்.

### அழைப்புகளைச் செய்வது பெறுவது அல்லது செய்திகளை அனுப்புவது பெறுவது தொடர்பான சேவைகள்

இந்தச் சேவைகளின் எடுத்துக்காட்டுகளில் அடங்குபவை:

- Google Voice - அழைப்புகளைச் செய்யலாம் பெறலாம், மெசேஜ்களை அனுப்பலாம் மற்றும் குரலஞ்சலை நிர்வகிக்கலாம்
- Google Meet - வீடியோ அழைப்புகளைச் செய்யலாம் பெறலாம்
- Gmail - மின்னஞ்சல்களை அனுப்பலாம் பெறலாம்
- Google Chat - மெசேஜ்களை அனுப்பலாம் பெறலாம்
- Google Duo - வீடியோ அழைப்புகளைச் செய்யலாம் பெறலாம், மெசேஜ்களை அனுப்பலாம் பெறலாம்
- Google Fi - அட்டகாசமான மொபைல் திட்டம்

## ஆன்லைனில் உங்களுக்கு முக்கியமானவர்கள்

எடுத்துக்காட்டாக, நீங்கள் எழுதும் மின்னஞ்சலின் பெறுநர், Cc அல்லது Bcc புலத்தில் முகவரியை உள்ளிடும் போது, அடிக்கடித் தொடர்புகொள்பவர்களின் அடிப்படையில், மின்னஞ்சல் முகவரிகளை Gmail பரிந்துரைக்கும்.

## உங்கள் உடல் அல்லது மன ஆரோக்கியம் பற்றிய தொடர்புடைய இதேபோன்ற தகவல்கள்

நாங்கள் வழங்கும் Fitbit, Pixel Watch, Nest, Google Fit போன்ற உடற்பயிற்சித் தயாரிப்புகளையும் ஆப்ஸையும் நீங்கள் பயன்படுத்தினால் உயரம், எடை போன்ற நீங்கள் வழங்கும் தகவல்களைச் சேகரிப்போம். உங்கள் உறக்கப் பேட்டர்ன்கள், இதயத் துடிப்பு, தோலின் வெப்பநிலை, எரிக்கப்பட்ட கலோரிகள், காலடிகள் போன்ற தகவல்களையும் இந்த ஆப்ஸில் இருந்தும் சாதனங்களில் இருந்தும் சேகரிப்போம்.

## உங்கள் சாதனத்திலிருந்து பெறும் சென்சார் தரவு

உங்கள் இருப்பிடத்தையும் பயணத்தையும் நன்றாகத் தெரிந்துகொள்ள, உங்கள் சாதனத்தில் இருக்கக்கூடிய சென்சார்கள் பயன்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, வேகத்தைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் முடுக்க அளவி அல்லது உங்கள் பயணத் திசையை அறிந்துகொள்ள பயன்படுத்தப்படும் திசை காட்டி. இருப்பிடத்

தகவல்களை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துவோம் என்பது குறித்து மேலும் அறிக.

## உங்கள் சாதனத்திற்கு அருகிலுள்ளவற்றைப் பற்றிய தகவல்

Android சாதனத்தில் நீங்கள் Google இன் இருப்பிடச் சேவைகளைப் பயன்படுத்தினால், Google வரைபடம் போன்று உங்கள் இருப்பிடத்தைச் சார்ந்திருக்கும் பயன்பாடுகளின் செயல்திறனை மேம்படுத்துவோம். Google இன் இருப்பிடச் சேவைகளைப் பயன்படுத்தினால், உங்கள் சாதனமானது அதன் இருப்பிடம், சென்சார்கள் (எ.கா. முடுக்க அளவி), அருகிலுள்ள செல் டவர்கள் மற்றும் வைஃபை அணுகல் மையங்கள் (எ.கா. MAC முகவரி மற்றும் சிக்னல் வலிமை) ஆகியவற்றைப் பற்றிய தகவலை Googleக்கு அனுப்பும். இவை அனைத்தும் உங்கள் இருப்பிடத்தைக் கண்டறிய உதவும். சாதன அமைப்புகளைப் பயன்படுத்தி, Google இருப்பிடச் சேவைகளை இயக்கலாம். மேலும் அறிக

## உங்கள் Google கணக்குடன் ஒத்திசைத்தல்

உங்கள் Google கணக்கில் Chrome ஒத்திசைவை இயக்கியிருந்தால், Chrome உலாவல் வரலாறு உங்கள் கணக்கில் மட்டுமே சேமிக்கப்படும். மேலும் அறிக

## உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கக்கூடிய விளம்பரங்கள்

எடுத்துக்காட்டாக, நீங்கள் YouTube இல் பேக்கிங் பற்றிய வீடியோக்களைப் பார்த்தால், இணையத்தில் உலாவும் போது, பேக்கிங் தொடர்பான விளம்பரங்களை நீங்கள் அதிகமாகப் பார்க்கக்கூடும். இருப்பிடத்தைக் கண்டறிவதற்காக, உங்கள் IP முகவரியையும் நாங்கள் பயன்படுத்தக்கூடும். இதன் மூலம், நீங்கள் “பீட்சா” என்று தேடினால், அருகில் உள்ள பீட்சா டெலிவரி சேவை தொடர்பான விளம்பரங்களைப் பார்ப்பீர்கள். Google விளம்பரங்களைப் பற்றியும் குறிப்பிட்ட விளம்பரங்கள் உங்களுக்குக் காட்டப்படுவதற்கான காரணத்தைப் பற்றியும் மேலும் அறிக.

## உணர்வுப்பூர்வ வகைகள்

தனிப்பயனாக்கிய விளம்பரங்களை உங்களுக்குக் காட்டும் போது, உங்கள் செயல்பாட்டின் அடிப்படையில் நீங்கள் விரும்பக்கூடும் என நாங்கள் நினைக்கும் தலைப்புகளைப் பயன்படுத்துவோம். எடுத்துக்காட்டாக, "சமையல் மற்றும் சமையல் குறிப்புகள்" அல்லது "வான்வழிப் பயணம்" போன்றவற்றுடன் தொடர்புடைய விளம்பரங்களை நீங்கள் பார்க்கலாம். நாங்கள் இனம், மதம், பாலின நாட்டம் அல்லது உடல்நலம் போன்ற உணர்வுப்பூர்வ வகைகளின் அடிப்படையில், தனிப்பயனாக்கிய விளம்பரங்களைக் காட்டுவதில்லை அல்லது தலைப்புகளைப் பயன்படுத்துவதில்லை. மேலும், எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும் விளம்பரதாரர்களும் இதுபோன்றே செயல்பட வேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.

## உரிய பாதுகாப்பு அம்சங்கள்

எடுத்துக்காட்டாக, தரவை நாங்கள் பெயரில்லாமல் வைத்திருக்கலாம் அல்லது தரவை உங்களைப் பற்றிய பிற தகவலுடன் இணைக்க முடியாததை உறுதிசெய்ய, அதை என்கிரிப்ட் செய்யலாம். மேலும் அறிக

## உலகம் முழுவதுமுள்ள சேவையகங்கள்

எடுத்துக்காட்டாக, எங்கள் தயாரிப்புகள் தொடர்ந்து பயனர்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்கு உதவ, உலகம் முழுவதும் உள்ள தரவு மையங்களை இயக்குகிறோம்.

## உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்

எடுத்துக்காட்டாக, எங்கள் விளம்பரங்களின் செயல்திறனை மேம்படுத்த, பிறர் விளம்பரங்களை எப்படிப் பயன்படுத்துகின்றனர் என்பதை ஆய்வு செய்கிறோம்.

## எங்கள் சேவைகள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப செயல்படுவதை உறுதிப்படுத்துதல்

எடுத்துக்காட்டாக, சிக்கல்கள் உள்ளனவா எனப் பார்க்க, எங்கள் அமைப்புகளைத் தொடர்ந்து கண்காணிப்போம். மேலும், குறிப்பிட்ட அம்சத்தில் ஏதேனும் தவறு இருந்தால், சிக்கல் ஏற்படுவதற்கு முன் சேகரித்த செயல்பாட்டுத் தகவலானது மதிப்பாய்வு செய்யப்படும். இது, எங்கள் பணியைச் சிறப்பாகச் செய்ய உதவுகிறது.

## எங்கள் சேவைகள் முழுவதும் நாங்கள் சேகரிக்கும் தகவலைப் பயன்படுத்துதல்

கிடைக்கக்கூடிய உங்களின் அமைப்புகளைப் பொறுத்து, எங்கள் சேவைகள் முழுவதும் நாங்கள் சேகரிக்கும் தகவலை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது தொடர்பான சில எடுத்துக்காட்டுகளில் அடங்குவன:

- நீங்கள் Google கணக்கில் உள்நுழைந்து, Google இல் தேடும் போது, Gmail அல்லது Google கேலெண்டர் போன்ற பிற Google தயாரிப்புகளின் உள்ளடக்கத்தில் உள்ள தொடர்புடைய தகவலுடன் பொது இணையத்திலிருந்து தேடல் முடிவுகளைப் பார்க்கலாம். வரவிருக்கும் விமானப் பயணங்கள், உணவகம் மற்றும் ஹோட்டல் முன்பதிவுகள் ஆகியவற்றின் நிலை அல்லது உங்கள் படங்கள் போன்றவை இதில் அடங்கும். மேலும் அறிக

- Gmail வழியாக ஒருவரைத் தொடர்புகொண்டு, அத்துடன் Google ஆவணத்திலோ அல்லது Google கேலெண்டரில் உள்ள நிகழ்விலோ அவரைச் சேர்க்க விரும்பினால், அவர் பெயரை நீங்கள் உள்ளிடத் தொடங்கும்போதே அவரது மின்னஞ்சல் முகவரியைத் தானாக நிரப்பி, அவரைச் சேர்ப்பதை Google எளிதாக்கும். இந்த அம்சம், உங்களுக்குத் தெரிந்தவர்களுடன் விஷயங்களைப் பகிர்வதை எளிதாக்குகிறது. மேலும் அறிக

- உங்கள் அமைப்புகளின் அடிப்படையில், தனிப்பயனாக்கிய உள்ளடக்கத்தை உங்களுக்குக் காட்ட, பிற Google தயாரிப்புகளில் நீங்கள் சேமித்துள்ள தரவை Google பயன்பாடு பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் மேற்கொண்ட தேடல்கள் இணையம்

மற்றும் பயன்பாட்டுச் செயல்பாட்டில் சேமிக்கப்பட்டிருந்தால், உங்கள் செயல்பாட்டின் அடிப்படையில், செய்திக் கட்டுரைகளையும் விளையாட்டுகளின் ஸ்கோர்கள் போன்று உங்கள் விருப்பங்கள் தொடர்பான பிற தகவலையும் Google பயன்பாடு காட்டலாம்.

- Google Home உடன் உங்கள் Google கணக்கை இணைத்தால், உங்கள் தகவலை நிர்வகிக்கலாம். அத்துடன், Google அசிஸ்டண்ட் மூலமாக விஷயங்களைச் செய்து முடிக்கலாம். எடுத்துக்காட்டாக, Google கேலெண்டரில் நிகழ்வுகளைச் சேர்க்கலாம் அல்லது அந்தந்த நாளுக்கான திட்ட அட்டவணையைப் பெறலாம், வரவிருக்கும் விமானப் பயணங்களின் நிலை குறித்த தகவல்களைக் கேட்கலாம் அல்லது பயணத் திசைகள் போன்ற தகவலை உங்கள் மொபைலுக்கு அனுப்பலாம். மேலும் அறிக

- நீங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பயனராக இருந்தால், சேவைகளை இணைப்பதில் நீங்கள் எடுக்கும் முடிவுகள் எங்கள் சேவைகள் முழுவதும் குறிப்பிட்ட சில Google சேவைகள் தரவைப் பயன்படுத்தும் விதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

## எங்கள் சேவைகளை வழங்குதல்

எங்கள் சேவைகளை வழங்க, உங்கள் தகவலை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது தொடர்பான எடுத்துக்காட்டுகளில் அடங்குபவை:

- YouTube வீடியோவை உங்களுக்குக் காட்டுவது போன்று நீங்கள் கேட்கும் தரவை உங்களுக்கு அனுப்ப, உங்கள் சாதனத்திற்கு ஒதுக்கப்பட்ட IP முகவரியைப் பயன்படுத்துவோம்

- உங்கள் Google கணக்கை அணுகுவது நீங்கள்தான் என்பதை உறுதிப்படுத்த, உங்கள் சாதனத்தில் உள்ள குக்கீகளில் சேமிக்கப்பட்டுள்ள பிரத்யேக அடையாளங்காட்டிகளைப் பயன்படுத்துவோம்

- ஆல்பங்கள், படத்தொகுப்புகள், பகிரக்கூடிய வகையிலான பிற உருவாக்கங்கள் ஆகியவற்றை நீங்கள் உருவாக்க உதவுவதற்கு, Google Photosஸிற்கு நீங்கள் பதிவேற்றும் படங்களும் வீடியோக்களும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அறிக

- உங்கள் Gmail இல் தோன்றும் "செக்-இன்" பொத்தானை உருவாக்க, உங்களுக்கு வந்துள்ள விமான உறுதிப்படுத்தல் மின்னஞ்சல் பயன்படுத்தப்படலாம்

- எங்களிடமிருந்து சேவைகளையோ பொருட்களையோ வாங்கும் போது, ஷிப்பிங் முகவரி அல்லது டெலிவரி சம்பந்தப்பட்ட விவரங்கள் போன்ற தகவலை எங்களிடம் நீங்கள் வழங்கக்கூடும். இந்தத் தகவலை, உங்கள் ஆர்டரைச் செயலாக்குவது, நிறைவுசெய்வது, டெலிவரி செய்வது போன்றவற்றுக்காகவும் நீங்கள் வாங்கும் பொருள் அல்லது சேவை தொடர்பான ஆதரவை வழங்குவதற்காகவும் பயன்படுத்துவோம்.

## எங்கள் சேவைகளைத் தனிப்பயனாக்குதல்

எடுத்துக்காட்டாக, உங்கள் நாட்டில் பிரசித்திப் பெற்ற நிகழ்வைக் கொண்டாடும் வகையில், தேடலின் முகப்புப்பக்கத்தில் Google Doodleஐ நாங்கள் காட்டலாம்.

## எங்கள் சேவைகளைப் பயன்படுத்தும் மூன்றாம் தரப்புத் தளங்களிலும் பயன்பாடுகளிலும் மேற்கொள்ளும் செயல்பாடு

விளம்பரங்கள், பகுப்பாய்வு போன்ற Google சேவைகளை ஒருங்கிணைக்கும் இணையதளங்களும் ஆப்ஸும் எங்களுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

நீங்கள் எந்த உலாவி அல்லது உலாவிப் பயன்முறையைப் பயன்படுத்தினாலும் இந்தத் தகவல் சேகரிக்கப்படும். உதாரணமாக, Chromeமில் உள்ள மறைநிலைப் பயன்முறை உங்கள் சாதனத்தைப் பயன்படுத்தும் மற்றவர்களிடம் இருந்து உங்கள் உலாவல் தரவைத் தனிப்பட்டதாக வைத்திருக்க உதவும் என்றாலும், எங்கள் சேவைகளை ஒருங்கிணைத்துள்ள மூன்றாம் தரப்புத் தளங்கள் மற்றும் ஆப்ஸுக்கு நீங்கள் செல்லும்போது அவை Google உடன் தகவல்களைப் பகிரலாம்.

Google சேவைகளைப் பயன்படுத்தும் தளங்கள் மற்றும் ஆப்ஸுக்கு நீங்கள் செல்லும்போதோ அவற்றைப் பயன்படுத்தும்போதோ

பகிரப்படும் தகவல்களைக் கட்டுப்படுத்துவதற்கான சில வழிகள் குறித்து நீங்கள் மேலும் தெரிந்துகொள்ளலாம்.

## எங்கள் பயனர்கள்

உதாரணமாக, எங்கள் ஆன்லைன் உள்ளடக்க மதிப்பீட்டுச் செயல்பாடுகளின்போது தவறான பயன்பாட்டைத் தடுக்கவும் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகரிக்கவும் எங்கள் சேவைகளில் இருந்து உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான கோரிக்கைகள் குறித்த தரவை Lumen உடன் Google பகிர்கிறது. இணையத்தைப் பயன்படுத்துபவர்கள் அவர்களின் உரிமைகளைப் புரிந்துகொள்ள உதவுவதற்காக Lumen இந்தக் கோரிக்கைகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்யும். மேலும் அறிக.

## கட்டணத் தகவல்

எடுத்துக்காட்டாக, உங்கள் Google கணக்கில் கிரெடிட் கார்டு அல்லது பிற கட்டண முறையைச் சேர்த்திருந்தால், எங்கள் சேவைகள் (Play ஸ்டோரில் உள்ள பயன்பாடுகள் போன்றவை) அனைத்திலும் பொருட்களை வாங்க, அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். உங்கள் பேமண்ட்டைச் செயல்படுத்துவதற்கு, வணிக வரி ஐடி போன்ற பிற தகவலையும் நாங்கள் கேட்கக்கூடும். சில சமயங்களில், உங்கள் அடையாளத்தையும் நாங்கள் சரிபார்க்க வேண்டியிருக்கலாம். மேலும், இதைச் செய்வதற்காக, உங்களிடம் சில தகவலை நாங்கள் கேட்கக்கூடும்.

நீங்கள் தவறான பிறந்தநாளை, அதாவது Google கணக்கைப் பெறுவதற்குப் போதுமான வயதை நீங்கள் எட்டவில்லை என்பதைக் குறிக்கும் விதமாக உள்ளிட்டிருந்தால், உங்கள் வயதைச் சரிபார்ப்பதற்காக, கட்டணத் தகவலையும் நாங்கள் பயன்படுத்தக்கூடும். மேலும் அறிக

## குரல் மற்றும் ஆடியோ தகவல்கள்

உதாரணமாக Google Search, Assistant, Maps ஆகியவற்றுடன் நீங்கள் பேசும்போது உங்கள் Google கணக்கில் ஆடியோ ரெக்கார்டிங்கை Google சேமிக்க வேண்டுமா என்பதை நீங்கள் தேர்வுசெய்து கொள்ளலாம். “Ok

Google” போன்ற கவனிக்கச் செய்யும் கட்டளையை உங்கள் சாதனம் கண்டறிந்தால், உங்கள் குரல் மற்றும் ஆடியோவுடன் கூடுதலாக, கட்டளையைச் செயல்படுத்துவதற்கு முன்பு சில வினாடிகளை Google ரெக்கார்டு செய்யும். மேலும் அறிக

## குறிப்பிட்ட கூட்டாளர்கள்

எடுத்துக்காட்டாக, குக்கீகளையோ அல்லது இதைப்போன்ற தொழில்நுட்பங்களையோ பயன்படுத்தி, தங்களது YouTube வீடியோக்கள் அல்லது விளம்பரங்களின் பார்வையாளர்களைப் பற்றி தெரிந்துகொள்ள, அளவிடக்கூடிய நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு YouTube படைப்பாளர்களையும் விளம்பரதாரர்களையும் அனுமதிக்கிறோம். மற்றொரு எடுத்துக்காட்டு, தங்களது தயாரிப்புகளைப் பார்க்கும் பல்வேறு மக்களின் எண்ணிக்கையை அறிந்துகொள்வதற்காகக் குக்கீகளைப் பயன்படுத்தும், எங்கள் ஷாப்பிங் பக்கங்களில் இடம்பெறும் வியாபாரிகள். இந்தக் கூட்டாளர்களைப் பற்றியும் அவர்கள் உங்கள் தகவலை எப்படிப் பயன்படுத்துகின்றனர் என்பதைப் பற்றியும் மேலும் அறிக.

## குறிப்பிட்ட Google சேவைகள்

எடுத்துக்காட்டாக, உங்கள் வலைப்பதிவை Blogger இலிருந்தோ அல்லது உங்களுக்குச் சொந்தமான Google தளத்தை Google Sites இலிருந்தோ நீக்கலாம். பயன்பாடுகள், கேம்கள் மற்றும் Play ஸ்டோரின் பிற உள்ளடக்கத்தில் வழங்கிய மதிப்புரைகளையும் நீங்கள் நீக்கலாம்.

## சட்டரீதியான செயல்முறை அல்லது அமல்படுத்தக்கூடிய அரசுக் கோரிக்கை

பிற தொழில்நுட்பம் மற்றும் தகவல்தொடர்பு நிறுவனங்களைப் போன்று, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் மற்றும் நீதிமன்றங்கள், பயனர் தரவை வெளியிடும்படிக் கேட்டு அனுப்பும் கோரிக்கைகளை Google தொடர்ந்து பெறுகிறது. நீங்கள் Google மூலம் சேமிக்கும் தரவின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பிற்கான மதிப்பு, நாங்கள் இந்தச் சட்டக் கோரிக்கைகளுக்கு இணங்குவதை ஆதரிக்கிறது. எங்களது சட்ட

நிபுணர்கள் குழு, கோரிக்கையின் வகையைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொன்றையும் மதிப்பாய்வு செய்கிறார்கள். அத்துடன், கோரிக்கை அதீதமாகத் தோன்றினாலோ அல்லது சரியான செயல்முறையைப் பின்பற்றவில்லை என்றாலோ, அதை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம். எங்கள் ஒளிவுமறைவின்மை அறிக்கையில் மேலும் அறிக.

## சாதனங்கள்

எடுத்துக்காட்டாக, Google Play மூலம் நீங்கள் வாங்கும் பயன்பாட்டை அல்லது திரைப்படத்தை முறையே எந்தச் சாதனத்தில் நிறுவுவது அல்லது பார்ப்பது என்பதைத் தீர்மானிக்க உங்களுக்கு உதவும் வகையில், உங்கள் சாதனங்களிலிருந்து பெறும் தகவலைப் பயன்படுத்துவோம். அத்துடன், உங்கள் கணக்கைப் பாதுகாப்பதற்கு உதவவும் இந்தத் தகவலைப் பயன்படுத்துவோம்.

## டேட்டா கண்ட்ரோலர் உங்கள் தகவல்களைச் செயலாக்குவதற்கான பொறுப்பைக் கொண்டிருக்கும்

உங்கள் தகவல்களைச் செயலாக்குவதற்கும் பொருந்தக்கூடிய தனியுரிமைச் சட்டங்களுக்கு இணங்கவும் Googleளின் இணை நிறுவனம் பொறுப்பாகும் என்பதே இதன் அர்த்தம்.

## தகவலை இணைத்தல்

முதல் தரப்புக் குக்கீகளை Google Analytics சார்ந்திருக்கிறது. அதாவது, Google Analytics வாடிக்கையாளர் குக்கீகளை அமைப்பார். எங்கள் அமைப்புகளைப் பயன்படுத்தி, Google Analytics வாடிக்கையாளர் மற்றும் Google இன் மூலமாக, பிற இணையதளங்களை எத்தனை முறை பார்வையிடுகிறீர்கள் என்ற தகவலுடன் தொடர்புடைய மூன்றாம் தரப்புக் குக்கீகளை, Google Analytics மூலம் உருவாக்கப்படும் தரவுடன் இணைக்க முடியும். எடுத்துக்காட்டாக, விளம்பரதாரர் மிகவும் தொடர்புடைய விளம்பரங்களை உருவாக்குவதற்காகவோ அல்லது பெறும் டிராஃபிக்கைப் பகுப்பாய்வு செய்வதற்கோ, தனது Google Analytics தரவைப் பயன்படுத்த விரும்பக்கூடும். மேலும் அறிக

தங்களின் விளம்பரப் பிரச்சாரங்களின் செயல்திறன்.

விளம்பரப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் குறித்து மேலும் அறிக.

## தவறான பயன்பாட்டிற்கு எதிரான பாதுகாப்பு

எடுத்துக்காட்டாக, பிறர் உங்கள் கணக்கைப் பயன்படுத்துவதாக நாங்கள் நினைத்தால், அதுகுறித்து உங்களுக்குத் தெரிவிக்க (இந்தச் சமயத்தில், உங்கள் கணக்கைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உங்களுக்கு உதவுவோம்) பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பற்றிய தகவல் உதவும்.

## தவறான பயன்பாட்டைக் கண்டறிதல்

ஸ்பேம், மால்வேர், சட்டவிரோத உள்ளடக்கம் (சிறார் பாலியல் வன்கொடுமை மற்றும் அவர்களைத் தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பான உள்ளடக்கம் உட்பட), எங்கள் கொள்கைகளை மீறும் வகையில் எங்கள் சிஸ்டங்களைத் தவறான பிற வழிகளில் பயன்படுத்துதல் ஆகியவற்றை நாங்கள் கண்டறிந்தால், உங்கள் கணக்கை நாங்கள் முடக்கக்கூடும் அல்லது தகுந்த பிற நடவடிக்கையை எடுக்கக்கூடும். சில சூழல்களில் உரிய அதிகாரிகளிடமும் மீறல் குறித்து நாங்கள் புகாரளிக்கக்கூடும்.

## தனிப்பயனாக்கிய தேடல் முடிவுகள்

எடுத்துக்காட்டாக, Google கணக்கில் நீங்கள் உள்நுழைந்திருந்து, இணையம் மற்றும் பயன்பாட்டுச் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டை இயக்கியிருந்தால், உங்களின் முந்தைய தேடல்கள், பிற Google சேவைகளில் நீங்கள் மேற்கொண்ட செயல்பாடு ஆகியவற்றின் அடிப்படையில், மிகவும் தொடர்புடைய தேடல் முடிவுகளை நீங்கள் பெறலாம். மேலும் அறிய, இங்கே பார்க்கவும். கணக்கிலிருந்து வெளியேறியிருந்தால் கூட, தனிப்பயனாக்கிய தேடல் முடிவுகளை நீங்கள் பெறலாம். இதுபோன்ற தேடல் தனிப்பயனாக்கம் உங்களுக்கு

வேண்டாம் எனில், தனிப்பட்ட முறையில் தேடலாம், உலாவலாம் அல்லது வெளியேறிய நிலையிலான தேடல் தனிப்பயனாக்கத்தை முடக்கலாம்.

## தனிப்பயனாக்கிய விளம்பரங்கள்

விளம்பரதாரர் வழங்கும் தகவலின் அடிப்படையிலும் தனிப்பயனாக்கிய விளம்பரங்களை நீங்கள் பார்க்கக்கூடும். எடுத்துக்காட்டாக, விளம்பரதாரரின் இணையதளத்தில் ஷாப்பிங் செய்தால், விளம்பரங்களை உங்களுக்குக் காட்டுவதற்காக, இணையதளத்தைப் பார்வையிட்டது தொடர்பான தகவலை அவர்கள் பயன்படுத்துவார்கள். மேலும் அறிக

## நீங்கள் லேபிளிடும் இடங்கள் (எ.கா. வீடு, பணியிடம்)

உங்கள் வீடு, பணியிடம் போன்ற முக்கிய இடங்களை உங்கள் Google கணக்கில் சேமித்து வைத்துக்கொள்ள நீங்கள் தேர்வுசெய்யலாம். உங்கள் வீடு அல்லது பணியிட முகவரிகளை நீங்கள் அமைத்தால், வீடு அல்லது பணியிடத்திற்கான வழிகளைக் கண்டறிதல், தேடல் முடிவுகளில் அவற்றுக்கு மிக அருகில் உள்ளவற்றைப் பெறுதல் உள்ளிட்ட செயல்களை மிகவும் எளிதாகச் செய்யவும், விளம்பரங்களுக்காகவும் அவை உதவும்.

உங்கள் Google கணக்கிற்குச் சென்று உங்கள் வீடு அல்லது பணியிட முகவரிகளை எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம் நீக்கலாம்.

## பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை

எங்கள் சேவைகளைப் பாதுகாப்பாகவும் நம்பகமானதாகவும் வைத்திருக்க, உங்கள் தகவலை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது தொடர்பான சில எடுத்துக்காட்டுகளில் அடங்குவன:

- தன்னியக்கமாக மேற்கொள்ளப்படும் தவறான பயன்பாட்டிற்கு எதிரான பாதுகாப்பை வழங்க, IP முகவரிகளையும் குக்கீயையும் சேகரித்து, ஆய்வு செய்கிறோம். Gmail பயனர்களுக்கு ஸ்பேம் அனுப்புவது, மோசடி வழியில் விளம்பரங்களைக் கிளிக் செய்து விளம்பரதாரர்களிடமிருந்து பணத்தைத் திருடுவது, டிஸ்ட்ரிபியூட்டட்

டினைல் ஆஃப் சர்வீஸ் (DDoS) தாக்குதலைத் துவங்குவதன் மூலம் உள்ளடக்கத்தைத் தணிக்கை செய்வது போன்ற பல விதங்களில் தவறான பயன்பாடு நிகழும்.

- Gmail இன் “கடைசிக் கணக்குச் செயல்பாடு” எனும் அம்சமானது, உங்களுக்குத் தெரியாமல் யாராவது உங்கள் மின்னஞ்சலை அணுகியுள்ளனரா என்பதையும் எப்போது அணுகினார்கள் என்பதையும் அறிந்துகொள்ள உங்களுக்கு உதவும். இந்த அம்சம், Gmail இல் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய செயல்பாடு குறித்த தகவலைக் (உங்கள் அஞ்சலை அணுகிய IP முகவரிகள், தொடர்புடைய இருப்பிடம், அணுகிய தேதி, நேரம் போன்றவை) காட்டும். மேலும் அறிக

## பிற தளங்கள் மற்றும் பயன்பாடுகளில் நீங்கள் மேற்கொள்ளும் செயல்பாடு

Google சேவைகளை நீங்கள் பயன்படுத்துவதன் (எ.கா. உங்கள் கணக்கை Chrome உடன் ஒத்திசைப்பது அல்லது Google உடன் கூட்டாளராக உள்ள தளங்களையும் பயன்பாடுகளையும் பார்வையிடுவது) மூலம் இந்தச் செயல்பாடு பெறப்படலாம். பல இணையதளங்களும் பயன்பாடுகளும், அவற்றின் உள்ளடக்கத்தையும் சேவைகளையும் மேம்படுத்த Google உடன் கூட்டாளராக உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு இணையதளம் எங்கள் விளம்பரச் சேவைகள் (எ.கா. AdSense) அல்லது பகுப்பாய்வுக் கருவிகளைப் (எ.கா. Google Analytics) பயன்படுத்தலாம் அல்லது பிற உள்ளடக்கத்தை (எ.கா. YouTube இல் உள்ள வீடியோக்கள்) உட்பொதிக்கலாம். உங்கள் கணக்கு அமைப்புகள், பயன்படுத்தப்படும் தயாரிப்புகள் (எடுத்துக்காட்டாக, ஒரு கூட்டாளர் எங்கள் விளம்பரச் சேவைகளுடன் சேர்த்து Google Analyticsஐப் பயன்படுத்துவது) ஆகியவற்றின் அடிப்படையில், உங்கள் செயல்பாடு குறித்த தகவலை இந்தச் சேவைகள் Google உடன் பகிரலாம், மேலும் இந்தத் தரவு உங்கள் தனிப்பட்ட தகவலுடன் தொடர்புப்படுத்தப்படலாம்.

எங்கள் கூட்டாளர்களின் தளங்கள் அல்லது பயன்பாடுகளை நீங்கள் பயன்படுத்தும் போது, Google எப்படித் தரவைப் பயன்படுத்துகிறது என்பதைப் பற்றி மேலும் அறிக.

## பொதுமக்கள்

உதாரணமாக, உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான Googleளின் கொள்கைகள் அல்லது பொருந்தக்கூடிய சட்டத்திற்குட்பட்டு, எங்கள் சேவைகளில் இருந்து உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான கோரிக்கைகள் குறித்த தகவல்களைப் பின்வரும் காரணங்களுக்காகச் செயலாக்குகிறோம்: கோரிக்கையை மதிப்பீடு செய்தல், வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்தல், பொறுப்புடைமையை அதிகரித்தல் மற்றும் இந்தச் செயல்பாடுகளில் தவறான பயன்பாட்டையும் மோசடியையும் தடுத்தல்.

## பொதுமக்களுக்குப் பயன்களைத் தருபவை

உதாரணமாக, பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆராய்ச்சிக்கு உதவுதல், இந்தக் கோரிக்கைகள் குறித்த வெளிப்படைத்தன்மையை வழங்குதல் ஆகியவற்றிற்காக எங்கள் சேவைகளில் இருந்து உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான கோரிக்கைகள் குறித்த தகவல்களைச் செயலாக்குகிறோம்.

## பொதுவில் அணுகக்கூடிய மூலங்கள்

எடுத்துக்காட்டாக, Googleளின் AI மாடல்களைப் பயிற்றுவிக்கவும் Google Translate, Gemini ஆப்ஸ், Cloud AI செயல்திறன்கள் போன்ற தயாரிப்புகள் மற்றும் அம்சங்களை உருவாக்கவும் உதவும் வகையில், ஆன்லைனில் பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல்களையோ பொதுவான பிற ஆதாரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தகவல்களையோ நாங்கள் சேகரிக்கக்கூடும். அல்லது ஏதேனும் இணையதளத்தில் உங்கள் பிசினஸ் பற்றிய தகவல் இருந்தால் அவற்றை நாங்கள் அட்டவணைப்படுத்தி Google சேவைகளில் காண்பிப்போம்.

## போக்குகளைக் காட்டுதல்

ஏதேனும் ஒன்றைப் பலர் தேடத் தொடங்கும் போது, அந்தச் சமயத்தில் உள்ள குறிப்பிட்ட போக்குகளைக் குறித்த பயனுள்ள தகவலை அது வழங்கலாம். குறிப்பிட்ட கால அளவில் மேற்கொள்ளப்பட்ட தேடல்கள் எந்தளவுக்குப் பிரபலமாக இருந்தன என்பதை மதிப்பிட, Google இணையத் தேடல்களை Google Trends ஆய்வுசெய்யும், மேலும் ஆய்வில்

பெற்ற முடிவுகளை ஒருங்கிணைத்தல் விதிகளின் அடிப்படையில் பொதுவில் பகிரும். மேலும் அறிக

## முறையாகச் செயல்பட குக்கீகளைச் சார்ந்திருத்தல்

எடுத்துக்காட்டாக, 'lbcs' எனும் குக்கீயைப் பயன்படுத்துகிறோம். இதன் மூலம், ஒரே உலாவியில் பல Google ஆவணத்தைத் திறக்கலாம். இந்தக் குக்கீயைத் தடுத்தால், Google ஆவணம் எதிர்பார்த்தபடி செயல்படாமல் போகக்கூடும். மேலும் அறிக

## மூன்றாம் தரப்பினர்

எடுத்துக்காட்டாக, உரிமைகளைக் கொண்டவர்களின் உள்ளடக்கம் எங்கள் சேவைகளில் எப்படிப் பயன்படுத்தப்பட்டது என்பதைப் பற்றிய பயன்பாட்டுப் புள்ளிவிவரங்களை அவர்களுக்குத் தெரிவிக்க, உங்கள் தகவலைச் செயல்படுத்துவோம். பிறர் உங்கள் பெயரைத் தேடினாலும், உங்கள் தகவலை நாங்கள் செயல்படுத்தக்கூடும், மேலும் உங்களைப் பற்றி பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல் உள்ள தளங்கள் தொடர்பான தேடல் முடிவுகளைக் காட்டுவோம்.

## மேம்பாடுகளைச் செய்தல்

எடுத்துக்காட்டாக, பிறர் எங்கள் சேவைகளை எப்படிப் பயன்படுத்துகின்றனர் என்பதை ஆய்வு செய்வதற்காக, குக்கீகளைப் பயன்படுத்துகிறோம். இதன் மூலம், இன்னும் சிறந்த தயாரிப்புகளை எங்களால் உருவாக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட பணியை முடிப்பதற்குப் பிறர் அதிக நேரம் எடுத்துக்கொள்வதையோ அல்லது எல்லாப் படிகளையும் முடிப்பதில் அவர்களுக்கு இருக்கும் சிக்கல்களைக் கண்டறியவோ இது எங்களுக்கு உதவக்கூடும். பின்னர் அந்த அம்சத்தின் வடிவமைப்பை மாற்றியமைத்து, அனைவருக்கும் ஏற்ற வகையில் தயாரிப்பை மேம்படுத்துவோம்.

## மொபைல் எண்

உங்கள் கணக்கில் மொபைல் எண்ணைச் சேர்த்திருந்தால், உங்கள் அமைப்புகளின் அடிப்படையில், வெவ்வேறு நோக்கங்களுக்காக Google சேவைகள் அனைத்திலும் அது பயன்படுத்தப்படலாம். எடுத்துக்காட்டாக, நீங்கள் கடவுச்சொல்லை மறந்திருந்தால், கணக்கை அணுக உதவவும் பிறர் உங்களைத் தேடி, தொடர்புகொள்வதற்கு உதவவும் உங்களுக்கு மிகவும் தொடர்புடைய விளம்பரங்களைக் காட்டவும், மொபைல் எண் பயன்படுத்தப்படலாம். மேலும் அறிக

## விளம்பரதாரர்களின் சார்பாக விளம்பரம் மற்றும் ஆராய்ச்சி சேவைகளை வழங்குதல்

எடுத்துக்காட்டாக, வணிகர்கள் தங்களது லாயல்டி கார்டு திட்டங்களிலிருந்து தரவைப் பதிவேற்றலாம். இதன் மூலம், அவர்கள் தங்களது லாயல்டி தகவல்களைத் தேடல் அல்லது ஷாப்பிங் முடிவுகளில் சேர்க்க முடியும் அல்லது தங்களது விளம்பரங்களின் செயல்திறனை நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும். ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கைகளை மட்டுமே விளம்பரதாரர்களிடம் வழங்குகிறோம். இதில் தனிப்பட்ட நபரைக் குறித்த தகவல் இருக்காது.

## விஷயம் மற்றும் விளம்பரங்களின் பார்வைகளும் அதனுடனான ஊடாடல்களும்

எடுத்துக்காட்டாக, விளம்பரங்களின் பார்வைகள் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளைக் குறித்த தகவலைச் சேகரிப்போம். இதன் மூலம், விளம்பரதாரர்களிடம் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கைகளை நாங்கள் வழங்க முடியும். அதாவது, பக்கத்தில் நாங்கள் விளம்பரத்தைக் காட்டியிருப்பதையும் பார்வையாளர் விளம்பரத்தைப் பார்த்திருக்க வாய்ப்பிருப்பதையும் அவர்களுக்குத் தெரிவித்தல். விளம்பரத்தில் சுட்டியை எப்படி நகர்த்துகிறீர்கள் அல்லது விளம்பரம் காட்டப்படும் பக்கத்தில் செயல்களை மேற்கொண்டீர்களா என்பது போன்ற பிற செயல்பாடுகளையும் அளவிடுவோம்.

## Google கூட்டாளர்கள்

விளம்பரங்களைக் காட்டுவதற்காக, 2 மில்லியனுக்கும் மேற்பட்ட Google அல்லாத இணையதளங்களும் பயன்பாடுகளும் Google உடன் கூட்டாளராக உள்ளன. மேலும் அறிக

## Google சேவைகளில் மேற்கொள்ளும் செயல்பாடுகள்

உங்கள் Google கணக்கில் உள்நுழைந்திருந்து இணையம் மற்றும் ஆப்ஸ் செயல்பாட்டை நீங்கள் இயக்கியிருந்தால் Google தளங்கள், ஆப்ஸ், சேவைகள் ஆகியவற்றில் உள்ள உங்கள் செயல்பாட்டுத் தரவு உங்கள் கணக்கின் 'இணையம் மற்றும் ஆப்ஸ் செயல்பாட்டில்' சேமிக்கப்படலாம். சில செயல்பாடுகளில், Google சேவையைப் பயன்படுத்தும்போது நீங்கள் இருந்த பொதுவான பகுதி குறித்த தகவல் இருக்கலாம். பொதுவான பகுதியைப் பயன்படுத்தி ஒன்றைத் தேடும்போது குறைந்தது 3 சதுர கிலோமீட்டர் தொலைவு எல்லைக்குள்ளான பகுதி, தேடலுக்குப் பயன்படுத்தப்படும் அல்லது குறைந்தது 1000 பேர் வசிக்கக்கூடிய இருப்பிடங்களை உள்ளடக்கிய பகுதி வரை அந்த எல்லை விரிவடையும். இது உங்கள் தனியுரிமையைப் பாதுகாக்க உதவுகிறது.

சில சந்தர்ப்பங்களில், உங்கள் தேடலுக்கான தொடர்புடைய இருப்பிடத்தைக் கணிப்பதற்குக் கடந்த காலத்தில் எங்கிருந்தெல்லாம் நீங்கள் தேடினீர்களோ அந்தப் பகுதிகள் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக, நீங்கள் சென்னையில் இருக்கும்போது காஃபி கடைகளைத் தேடுகிறீர்கள் எனில், எதிர்காலத்தில் நீங்கள் ஏதேனும் தேடும்போது சென்னைக்கான முடிவுகள் உங்களுக்குக் காட்டப்படக்கூடும்.

எனது செயல்பாடுகள் என்பதற்குச் சென்று உங்கள் இணையம் மற்றும் ஆப்ஸ் செயல்பாட்டை நீங்கள் பார்க்கலாம் கட்டுப்படுத்தலாம்.

## Google பயன்பாடுகளைக் கொண்ட Android சாதனம்

Google பயன்பாடுகளைக் கொண்ட Android சாதனங்களில் அடங்குபவை: Google அல்லது எங்கள் கூட்டாளர்களில் ஒருவர் விற்பனை செய்த சாதனங்கள் மற்றும் மொபைல்கள், கேமராக்கள், வாகனங்கள், அணியக்கூடிய சாதனங்கள் மற்றும் டிவிகள். இந்தச் சாதனங்கள், Google Play சேவைகளையும் Gmail, வரைபடம், மொபைல் கேமரா,

மொபைல் டயலர், உரையிலிருந்து பேச்சுக்கு மாற்றுதல், விசைப்பலகை உள்ளீடு, பாதுகாப்பு அம்சங்கள் போன்ற சேவைகள் அடங்கிய முன்கூட்டியே நிறுவப்பட்டுள்ள பிற பயன்பாடுகளையும் பயன்படுத்தும். Google Play சேவைகள் குறித்து மேலும் அறிக.